
# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

### தொகுதி - 1




**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

# கிறித்தவ இலக்கிய வெளியில்
# மனித மதிப்பீடுகள்

(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு )

ISBN: 978-93-87865-06-8

தொகுதி – 1

( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற
பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளயிடப்பட்டது )

பதிப்பாசிரியர்கள்
முனைவர் ஆ. பாப்பி கமலா பாய், தமிழ்த்துறைத் தலைவர்
முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி
முனைவர் இரா. டயானா கிறிஸ்டி
முனைவர் இரா. ஏஞ்சல்
திருமதி பா. திவ்யா
திருமதி டே. ஆனி மரிய ஜான்சி

வெளியீடு

தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
மதுரை - 18

# திருவிவிலியம் தரும் அமைதிவாழ்வு

முனைவர் ஆ. பாப்பிகமலாபாய்,
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை - 18.

அமைதி என்னும் சொல் உலகில் வாழும் மனிதர்களுக்கு எல்லா நிலைகளிலும் தேவைப்படுகின்ற ஒன்றாகும், இன்றைய உலகின் போர்களும். பூசல்களும் மனித வாழ்வில் தீமையின் ஆற்றல் வேரூன்றிவிட்டது என்பதைக் காட்டுகிறது. உலகத் தோற்றமுதலே மனித இனம் மோதல்களுக்கிடையே வாழ்ந்து வந்துள்ளது, இந்நிலையில் உலகில் பல சமயங்களும் அமைதியாக்கக் கருத்துகளை எடுத்துரைத்து மக்களை நல்வழியில் செயல்படத் தூண்டுகின்றன, கிறித்தவ சமயபுனித நூலான திருவிவிலியம் அமைதி என்பதை அடிப்படை மதிப்பீடுகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளது.

கிறித்தவம் குறிப்பிடும் அமைதி அல்லது. சமாதானம் என்னும் சொல் திருவிவிலியம் முழுமையும் இடம்பெறும் சொல்லாகும், கிறித்தவத்தின் மையக் கருத்தே சமாதானத்தை உருவாக்குவதாகும், இச்சொல் பழைய ஏற்பாட்டில் 'ஷாலோம்' (Shalom) என்ற எபிரேயச் சொல்லாலும், புதிய ஏற்பாட்டில் 'ஐரேனே' (Eirene) என்னும் கிரேக்கச் சொல்லாலும் குறிக்கப்படுகிறது. எபிரேய மொழி யூத இனத்தவரின் தாய்மொழியாக அமைந்து அம்மக்களின் பற்றுறுதி, சமயநம்பிக்கை, கலாச்சாரம் முதலியவற்றை வெளிப்படுத்துவதாக அமைகிறது. "ஷாலோம் (Shalom) என்பதற்கு வளமான, நிறைவான ஆசீர்வாதங்கள் நிறைந்த வாழ்வு; இறைவனால் மனிதருக்கு அருளப்படும் வளமான வாழ்வு" (டாக். பாண்டியன், டாக். வீரா அழகிரிசாமி, சமயங்களும் அமைதி அகிம்சைப் பண்பாடும், ப. 26) எனப் பொருளுண்டு, இக்கருத்தின் அடிப்படையில் நோக்கினால் அமைதி என்பது மனித வேட்கையாகவும், செயற்பாடாகவும் நின்றுவிடாமல் இறைவனின் திருக்கொடை என்னும் கருத்தைப் புலப்படுத்துகிறது.

அமைதியைக் குறிக்கும் 'ஐரேனே' என்னும் சொல்லாட்சி கிரேக்க மொழியைச் சார்ந்தது. இது 'யுத்தமற்ற நிலை' என்னும் பொருளைத் தருகிறது. புதிய ஏற்பாட்டில் ஷாலோம் எனும் சொல் யூத மத நம்பிக்கையையும், இயேசுகிறித்துவைக் குறித்த நம்பிக்கையையும் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய இறையரசு மற்றும் இறையரசின் அமைதியையும் குறிப்பதாக அமைந்துள்ளது. இயேசு கிறித்துவின் மீது வைக்கும் நம்பிக்கை என்பது மனுக்குலத்துக்கும் இயற்கைக்கும் அருளப்படும் அமைதி நிறைந்த புது வாழ்வைச் சுட்டுகிறது. சிலுவையில் அறையுண்டு இறந்து உயிர்த்தெழுந்த இயேசு மனுக்குலத்திற்கு அமைதி உண்டாகட்டும் என்று வாழ்த்துகிறார். இது வெறும் வாழ்த்துரையாக அமையாமல் மெய்வாழ்வு தரும் வாழ்த்தாக அமைந்துள்ளது.

எபிரேய மொழியில் இடம்பெறும் 'ஷாலோம்' என்னும் சொல் நிறைவு, வளமை, புதுப்பித்தல், உண்மை போன்றவற்றைக் குறித்து நிற்கிறது. "ஷாலோம் என்ற வார்த்தையின் அடிப்படையான பொருள் என்னவென்றால் நம்முடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் இசைவு, முழுமை, ஆரோக்கியம், நன்மை, வெற்றி ஆகியவைகள் நிறைந்திருக்கும் தன்மையாகும்" (டேவிட் ஈ. ஸ்டூவர்ட், நிறைவாழ்வு ஆய்வு வேதாகமம், ப. 1035) என நிறைவாழ்வு ஆய்வு வேதாகமம் குறிப்பிடுகிறது, மேலும் நாள்தோறும் வாழ்வில் ஏற்படும் வளம், நன்மை போன்றவற்றை இயற்கையோடும், மனிதர்களோடும், சமூகத்தோடும் இணைந்து வாழும் நிலையையும் இச்சொல் குறிக்கின்றது. எனவே இச்சொல் வளம், நட்பு, சுகவாழ்வு, ஓய்வு, மீட்பு என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. அமைதியும் மகிழ்ச்சியும், அமைதியும் மீட்பும், அமைதியும் நீதியும் என்னும் சொற்றொடர்கள் திருவிவிலியத்தில் இணைந்து வருகின்றன.

பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள 'ஷாலோம்' என்னும் சொல் சமாதானம் என்னும் பொருளைத் தன்னுள் அடக்கியுள்ளது, தாவீது அப்சலோமின் சுகத்தைப் பற்றி விசாரிக்கும்போது "இளைஞன் அப்சலோம் நலமா?" (2சாமு 18 : 29) என்று கேட்கிறான். சங்கீதக்காரன் உடல் நலமில்லாத நிலையில் "நீர் கடுஞ்சினங்கொண்டதால் என் உடலில் நலமே இல்லை" (தி.பா. 38:3) என்கிறார். கடவுள் மனிதனைக் குணப்படுத்தி அவனுக்கு ஆறுதல் அளிப்பவராகச் செயல்படுகிறார். "தொலையில் இருப்போருக்கும் அருகில் இருப்போருக்கும் அமைதி என்கிறார் ஆண்டவர். அவர்களை நான் நலமடையச் செய்வேன்"